# FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS
# TAMILNADU CIRCLE

**DATE:-09.12.2015**

அன்பார்ந்த தோழர்களே,

வெள்ள நிவாரணப்பணிகளை கவனிக்கவும், சேவைகளை சரி செய்ய உதவி செய்யவும் BSNL தலைமையகத்தில் இருந்து நமது CMந BSNL திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா, நIRECTOR(CFA) திரு N.K.குப்தா உள்ளிட்ட அதிகாரிகள் தமிழகம் வந்துள்ளனர். நேற்றைய தினம் தமிழக தலைமை செயலாளரை சந்தித்துள்ளனர். சென்னை வெள்ளத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு BSNL வழங்கிய சிறப்பான சேவைகள் தொடர்பாக நமது CMநயிடம் பாராட்டியுள்ளார்.

அது சமயம் CMந BSNL அவர்களை சந்திக்க வேண்டுமென்ற தமிழக FORUMத்தின் கோரிக்கையை ஏற்று 09.12.2015 அன்று காலை 10.30 அளவில் அனைத்து சங்க பிரதிநிதிகளையும் அழைத்தார். நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் CMந BSNL திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா, நIRECTOR(CFA) திரு N.K.குப்தா, திருமதி N.பூங்குழலி CGM தமிழ்நாடு, திருமிகு N.கலாவதி CGM சென்னை உள்ளிட்ட பல அதிகாரிகள் பங்கேற்றனர். தொழிற்சங்க தலைவர்களின் கருத்துக்களை அவர் கேட்டார். அது சமயம் தமிழக FORUM தலைவர் தோழர் R.பட்டாபிராமன், அமைப்பாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன், SNEA மாநில செயலாளர் தோழர் R.ராஜசேகர், AIBSNLEA மாநில செயலாளர் தோழர் S.சிவகுமார், TSOAவின் பொது செயலாளர், சென்னை மாநில BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் K.கோவிந்தராஜன், AIBSNLEA மாநில செயலாளர் தோழர் உதயசூரியன் உள்ளிட்ட பலர் பேசினர்.

தமிழ் மாநில FORUM சார்பாக பேசிய தலைவர்கள், நாம் கொடுத்துள்ள மனுவில் உள்ள விஷயங்களுடன் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் உள்ள அனைத்து தொலைபேசி நிலையங்களும் ப்ளீச்சிங் செய்யப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளையும் எடுத்துரைத்தனர்.

அனைத்தையும் பொறுமையாக கேட்ட பின்னர் CMந BSNL உரையாற்றினார். அவர் பேசுகையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தமிழக மக்களின் நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியா பெருமைப்படுகிறது. அதே போல சென்னையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் BSNLஐ பெருமை பாராட்டுகிறார்கள். அதற்காக பணியாற்றிய ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். தற்போது பெற்றுள்ள இந்த பெருமையை தக்க வைக்கக் கூடிய வகையில், சிறப்பான சேவைகளை ஒவ்வொரு சந்தாதாரர்களுக்கும் கொண்டு செல்லக் கூடிய பணிகளை அனைவரும் செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் அந்த பெருமையை நாம் இழக்க நேரிடும். எனவே அனைத்து அதிகாரிகளும், ஊழியர்களும் வாடிக்கையாளர் மகிழக்கூடிய வகையில் சேவைகளை செய்ய வேண்டும். அதில் தொழிற்சங்க தலைவர்களும், அதிகாரிகளும் ஊழியர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் வேண்டுகோள் வைத்தார்.

இந்தியாவில் உள்ள அனைத்து தொலைதொடர்பு நிறுவனங்களிலும் குறைவான கடன் உள்ள நிறுவனம் BSNLதான் என்பதை பெருமையுடன் சுட்டிக் காட்டினார். கடந்த ஆண்டு BSNL நிறுவனம் OPERATIONAL PROFIT அடைந்ததை மகிழ்வுடன் சுட்டிக் காட்டிய CMந அவர்கள், 2017-18ஆம் ஆண்டில் லாபமீட்டும் நிறுவனமாக மாற வேண்டும் என்பதை லட்சியமாக கொண்டு செயல்பட வேண்டும் என்று கூறினார்.

நமது FORUM சார்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக பேசுகையில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சேவைகளை சீராக்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் கார்ப்பரேட் அலுவலகம் மேற்கொள்ளும் என்று தெரிவித்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட BSNL ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள BSNL ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் ரூ.25,000/- வெள்ள முன்பணம் வழங்க வேண்டும், அனைத்து ஊழியர்களுக்கும் எந்த ஒரு தாமதமுமின்றி, வரையறையும் இன்றி GPF AநVANCE வழங்க வேண்டும், பல விலைமதிப்பு அதிகமுள்ள பொருட்களை வெள்ளம் காரணமாக இழந்த BSNL ஊழியர்களுக்கு ஒருலட்ச ரூபாய் வட்டியில்லா கடன் வழங்க வேண்டும், வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் பணிக்கு வர இயலாத ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் டிசம்பர் 1 முதல் 5ஆம் தேதி வரை சிறப்பு தற்காலிக விடுப்பு வழங்க வேண்டும் என்கின்ற நமது கோரிக்கைகளை பரிசீலித்து விரைவில் உரிய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

| | | | | |
|---|---|---|---|---|
| **(A.BABU RADHAKRISHNAN)** | **(R.PATTABI RAMAN)** | **(R.RAJASEKAR)** | **(S.SIVAKUMAR)** | **(M.S.RADHAKRISHNAN)** |
| **CONVENOR, FORUM & CS BSNLEU** | **PRESIDENT, FORUM& CS NFTE BSNL** | **CS SNEA** | **CS AIBSNLEA** | **CS AIBSNLOA** |